★ விலை ரூபா 1.25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

வெள்ளி விழா ஆண்டு

மலர் 25 மார்கழி 30 ரபி. ஆகி 10 இதழ் 333
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-1-84


# யாழ். மாவட்டத்தில் நேற்றும் பூரண ஹர்த்தால்!

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் இரண்டாவது நாளாகவும் நேற்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் அனுஷ்டித்துவரும் சாகும் வரை உண்ணுவிரதத்துக்கு அனுதாபம் தெரிவித்து நேற்றும் நேற்றுமுன்தினமும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டன.

கடந்த இரு நாட்களாக சினிமா தியேட்டர்கள் மூடப்பட்டிருந்தன.

நேற்றும் இ. போ. ச. பஸ்களோ, தனியார் பஸ்களோ, மினிபஸ்களோ, ஒட்டோ றிக்சாக்களோ சேவையில் ஈடுபடவில்லை. பொதுமக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருக்கக் காணப்பட்டது.

யாழ். செயலகம், யாழ். பிர 8-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கைச் சரித்திரத்தில் மிகப்பெரிய சம்பவம் ★

# காத்தான்குடி வங்கிக் கிளையில் மூன்று கோடி ரூபா கொள்ளை!

## வங்கி திறந்த கையுடன் நடந்த 'நாடகம்'!

(மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்)

**இலங்கைச் சரித்திரத்தில் மிகப்பெரிய வங்கிக் கொள்ளை காத்தான்குடியில் நேற்றுக்காலை நடைபெற்றுள்ளது.**

காத்தான்குடியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் நேற்றுக் காலை துப்பாக்கிமுனையில் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான நகைகளும், இரண்டரை லட்சம் ரூபா ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை சுமார் 8-45 மணியளவில் வங்கி உத்தியோகத்தர் நால்வர் உள்ளேசென்ற சமயம், இளைஞர்கள் வங்கி உத்தியோகத்தர்கள் போல உடை அணிந்து, அவர்களைத் தொடர்ந்துவங்கிக்குள்சென்று துப்பாக்கிமுனையில், அவர்களை எச்சரித்து இக்கொள்ளையை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறிது நேரத்தில் வங்கிமனேஜர் உள்ளே சென்றதும், அந்த இளைஞர்கள் துப்பாக்கி முனையில், இரும்புப் பெட்டியைத் திறக்குமாறு வற்புறுத்தியதாகவும், அந்தத் தன்னியக்க இரும்புப் பெட்டியை 9 மணிக்கே திறக்க முடியும் என்று மனேஜர் கூறியதும், அவர்கள் 9 மணி வரை உள்ளே காத்திருந்ததாகவும் கூறப்படுகிறது அச்சமயம் அவர்கள் தொலைபேசி வயர்களைத் துண்டித்ததாகவும் அறியப்படுகிறது.

இதே சமயம் இயந்திரத் துப்பாக்கிகளுடன் வங்கிக்கு வெளியில் சுமார் பத்து இளைஞர்கள் கண்காணித்துக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

வங்கிக்கு உள்ளே இருந்த இளைஞர்கள் 9 மணிக்கு இரும்

(8ம் பக்கம் பார்க்க)

## 4 அம்சங்கள் குறித்து 17ம் திகதி ஆராய்வர்!

(இ. கந்தசாமி)

நான்காவது நாளாக நேற்று நடந்த சர்வகட்சிமகாநாட்டில் பிரதிநிதிகள் சமர்ப்பித்திருந்த நகல் அறிக்கைகள், யோசனைகள், திருத்தங்கள் போன்றவை குறித்து ஆராயப்பட்டன. நாட்டு மக்களுக்கு மிகவும் பலனளிக்கக்கூடிய நான்கு அம்சங்கள் குறித்து, வரும் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதிநிதிகள் ஆராய்வார்கள். இது ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மகாநாட்டின் பின்னர் நடந்த பத்திரிகையாளர் மகா

(8-பக்கம் பார்க்க)

## கல்பகேயைச் சந்திப்பதில் எவ்வித பிரயோசனமுமில்லை!

### மாணவர் ஒன்றியத் தலைவர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''உயர் கல்வி அமைச்சு செயலாளர் கலாநிதி ஸ்டான்லி கல்பகேயைச் சந்திப்பதில் எவ்வித பிரயோசனமுமில்லை. அவரைச் சந்திக்கமாட்டோம். பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ் மாணவர் பிரச்னை பற்றி தெளிவாகவும், விரிவாகவும் ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். சுங்க இலாகா கொள்ளை: சுங்க மா அதிபர், அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

''யாழ். சுங்க இலாகாவிலிருந்து துவக்குகள், வாக்கிடோக்கிகள் மற்றும் சில முக்கிய உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இரும்புப் பெட்டி உடைக்கப்பட்ட பின்னரும் அதிலிருந்து இரண்டரை லட்சம் ரூபா தங்கப் பாளமும், நகைகளும் கொண்டு செல்லப்படவில்லை''

யாழ். மேலதிக உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். கணேஷ், சுங்கமா அதிபருக்கும் யாழ் அரசாங்க அதிபருக்கும் அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''இம்மாதம் 10 ம் திகதி இரவு ஆயுதம் தாங்கிய 8 இளைஞர்கள், யாழ். சுங்க இலாகாவிலிருந்த காவலாளியையும், பாதுகாவலரையும் கட்டிவிட்டு கொள்ளையடித்துள்ளனர். பாதுகாப்பு உத்தியோகத்தர் அறை, களஞ்சிய அறை, உதவிக் கலெக்டர் அறை, மேலதிக இறங்குதுறை அளவையாளர் அறைகள் உடைக்கப்பட்டுள்ளன.

''பாதுகாப்பு அறையிலிருந்து

(8-ம் பக்கம் பார்க்க)

# இருவர் மயக்கம்!

## 7 பேர் உடல்நிலை பாதிப்பு!!

[ஏ. வி. மாணிக்கம்]

சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் ஒன்பது பல்கலைக்கழக மாணவ மாணவிகளில் மாணவர் ஒருவரதும், மாணவியொருவரதும், உடல்நிலை, பாதிக்கப்பட்டு மயக்கமடைந்தநிலையிலுள்ளனர். மற்றைய ஏழு மாணவர்களது உடல்நிலையும் பலவீனப்பட்டுள்ளதாக, யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 5 நாட்களாகத் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருவது தெரிந்ததே.

நேற்றுக்காலை தொடக்கம் மருத்துவ பீடப் பேராசிரியரும், மருத்துவபீடத்தைச் சேர்ந்த சில மாணவர்களும் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களைப் பரிசோதித்தவண்ணம் இருந்தனர்.

கவலைக்கிடமான இரு மாணவர்களுக்கும் 'குளுக்கோஸ்' ஊசிமூலம் ஏற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு, அவர்கள் களைப்படைந்த நிலையிலும் மறுத்துவிட்டனர்.

கடந்த நான்கு நாட்களாக உப்புக் கரைத்த நீர்மாத்திரம் அருந்திவந்த உண்ணாவிரதிகள் நேற்றுடன் அதுவும் அருந்தமுடியாத நிலைக்குள்ளாகிவிட்டனர்.

கடந்த இரு நாட்களாக விடாது பெய்துகொண்டிருந்த மழையாலும், பனியாலும் ஏற்பட்ட குளிர் உண்ணாவிரதிகளின் உடல்களைத் தாக்கி

(8ம் பக்கம் பார்க்க)

### அறிவித்தல்

நாளை ஞாயிற்றுக்கிழமை (15-1 84) தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, 'ஈழநாடு' ஊழியருக்கு விடுமுறைதினமாதலால், திங்கட்கிழமை (16-1-84) மட்டும் ஈழநாடு' பத்திரிகை வெளிவரமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

— நிர்வாகி.

### பத்திரிகையாளருக்கு எம். ஏ. பட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவரும் 'தினகரன்' பத்திரிகை பிரதம ஆசிரியருமான திரு. ஆர். சிவகுருநாதன் யாழ். பல்கலைக் கழகத்தின் முதுகலைமாணி (எம். ஏ.) பரீட்சையில் தேர்

(8ம் பக்கம் பார்க்க)


யாழ்நகர், ஸ்ரான்லி வீதி-

"ருஜாந்தி பேணிச்சர்ஸ்"

ஸ்தாபனத்தார் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாவருக்கும் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

தரமான மரத்தளபாடங்கள், குசன்செற், சியஸ்ரா மெத்தைகள் நியாயவிலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

"ருஜாந்தி பேணிச்சர்ஸ்"

234/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

★ ★

குறிப்பு: இன்று (14-01-84) மாலை 4-30 மணிக்கு எமது ஸ்தாபனத்தாரால் நடாத்தப்படும் இன்னிசை விருந்தை இலங்கை வானொலியில் கேட்டு மகிழுங்கள்.

(135)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மணிக்கூட்டுக் கோபுர வீதி இல: 382, காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி இல. 10, 3-ம் குறுக் குத் தெரு. யாழ்ப்பாணம். 134

அச்சுவேலி யாழ்ப்பாணம் வீதியில் வீடு கட்டக்கூடிய 2 பரப்பு காணி விற்பனைக் குண்டு தொடர்புகொள்க ''ராணிஸ்டான்'' (தபால் நிலையம் அருகாமையில்), அச்சுவேலி. 111

மாவிட்டபுரம், கே.கே.எஸ் வீதியில் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில், சுமார் 52 அடி முகப்புடன் இரண்டு வீடுகள் அமைக்கக் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். S. அரியரத்தினம், கே. கே. எஸ் வீதி, மாவிட்டபுரம். 077

நல்லூர் செல்லர் வீதி (கல்வி காரியாலயத்துக்கு பக்கத்தில்) 31ம் இலக்க புதியவீடு 2 பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு (3 அறைகள் அனெக்ஸ், கராஜ் மற்றும் நவீன வசதிகளும் உண்டு) இதே விலாசத்தில் S. வரதராஜனுடன் தொடர்பு கொள்ளவும். 136

இத்தாலியன் புதிய குளிர் சாதனப்பெட்டி (Candy) 6,5 C. Ft. விற்பனைக் குண்டு தொடர்பு: ஹரிகரன், 217/1 கடைச்சாமி ரோட், நீராவியடி, யாழ்ப்பாணம். போன்: 22320 138

குப்பிளான் சந்திக்கருகாமையில், காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் கடையும் வீடும் விற்பனைக்குள்ளன தொடர்பு: வீ சிவசுப்பிரமணியம், சந்திரவாசா, குப்பிளான். 106

சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட டிறம் செற் (Drum Set) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: A. E. அரசரத்தினம், 3 off சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி. 105

''யாழ்ப்பாணம் 2-ம்குறுக்கு வீதியில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு விளம்பரதாரர் 25/1, 4-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24146.'' 042

நல்ல இன கறித்தேங்காய்த் தென்னம்பிள்ளைகள் (Hybrid) விற்பனைக்கு உண்டு. மிஸ்கி வைற், யாழ்ப்பாணம். 116

1ம் நம்பர் கலர் 15 கோஸ் பவர் மோட்டர் உமிஅடுப்பு மற்றும் உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. புத்தம புதியவை. சு. வையாபுரி, உப்புமில், மயிலிட்டி. 109

சுன்னாகம் ஈஸ்வரி இரும்புக் கடையில் கட்டிடத்துக்குத் தேவையான இரும்புசாமான்கள், பெயின்ற் வகைகளுடன் குடும்பத் தலைவியருக்கு தேவையான ஆட்டுகல். அம்மி, திருகை, கோவில் தளவரிசைகள் அனைத்தும் விற்பனைக் குண்டு. வவனியா, சூரிய ஸ்ரோர்சில் கைதேர்ந்த தொழில்நுட்பக் கலைஞர்களினால் கடைந்து தயாரிக்கப்படுகிறது. 142

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof K. நடராஜா ஜே. பி.யை 'லிங்க கிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் நற்போது தொடர்பு கொள்ளலாம். 089

## தேவை

வாசர். கிறீசர், உடன் தேவை. அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். பரஸ்கோலாபிறிகேசன் சேர்விஸ். பருத்தித்துறை வீதி, நல்லூர். 126

பிறின்ரிங், டிசைனிங் அத்துடன்பிறின்ரிங்ஸ்தாபனத்தை நிருவகிக்க அனுபவமுள்ள ஒருவர் தேவை. வியாழக்கிழமை (19-1-84) நேரில் சந்திக்கவும். நியூ வசந்தா ரெக்ஸ்ரைல் பிறின்ரிங் சென்ரர் 248/1, கே.கே. ரோட். யாழ்ப்பாணம். 036

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் 1½ அல்லது 2 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி உடன் தேவை. நல்ல இடத்திற்கு நல்லவிலை கொடுக்கப்படும். மானிப்பாய் ரோட்டிலும் விரும்பப் படுகிறது. தரகர் அல்லாதவர் விண்ணப்பிக்கவும், முதல் கடிதத்தில் விலை விபரங்கள் கோரப்படுகின்றன இராஜமுத்து ''ஏபனேசர்'' அரசடி வீதி, பண்டத்தரிப்பு. 104

வியாபாரக் கணக்கு எழுதுவதில் நல்ல அனுபவம் பெற்றவரும், வீடியோ ஸ்தாபனத்தில் பொறுப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் வேலைசெய்யும் தகுதி வாய்ந்த ஒருவர் உடன் தேவை. வீடியோ கிளப்பில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள் விசேஷ தகைமையுள்ளவர்களாகக் கருதப்படுவர்: பிணைப்பணம் எதிர்பார்க்கப்படும். சான்றிதழ்களுடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். திரு. ம. கணபதிப்பிள்ளை, 87/12, 1ம் ஒழுங்கை, பிறவுண்வீதி. யாழ்ப்பாணம் 057

## பயிற்சி

மாலைநேர எலக்றிக்கல் வயறிங் - ஒட்டோ வயறிங் இரண்டுமாத பயிற்சிகள் 16-1-1984 ல் ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 087

## சேவை

நீர்வேலி வடக்கிலிருந்து பலாலிவீதி ஊடாக யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு புதிய மினிபஸ் சேவை நடைபெறவுள்ளது தொடர்பு கொள்ளவும்: T. தியாகராசா, நீர்வேலி வடக்கு. மாசிவன் சந்தி, நீர்வேலி. 065

## தவறிவிட்டது

எமது கார் ஸ்டார் ''றிம் பிளேற்'' (அளவு 14) சில தினங்களுக்குமுன்னர் வீதியில் தவறி வீழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நோதேண் மோட்டர் வேக்ஸ், 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் சினிமா முன்பாக.) 096

## கல்வி

Radio and Electronic Engineering (3 Engineers 1 Technician) உடன் தொடர்பு கொள்க பொறியியல் கல்வி நிலையம் (Engineering - Education Centre) புதிய மேல் மாடிக்கட்டிடம் சாந்தி சினிமா அருகாமை யாழ்ப்பாணம். 072

## WANTED

Book Keeper required for well Established Jaffna Firm. Should possess experience in Mercantile Accounts. Capable of preparing Monthly Trial Balance, Profit and Loss Accounts, Balance Sheet etc. Good handwriting essential. Forward handwritten Applications in English stating salary expected with copies of testimonials Advt. No: 108, C/o Eelanadu, Jaffna. 108

Marketing Representative required for well Established Jaffna Firm energetic and Established Jaffna Firm energetic and experienced Salesmen with good contacts capable of obtaining Orders for well known Office Equipments, Agricultural Machineries, Vehicles. Workman Tools etc. Cash Security essential Forward handwritten applications in English stating salary required with copies of recent testimonials. Advt. No: 107 C/o Eelanadu, Jaffna. 107

Newtone Electricals in Jaffna requires an experienced Sales Manager for Electrical Department. Applicants should be less than 40 years of age with a minimum of 5years experience in the sale of electric items in an establishment of repute. Preference will be given for experience of import, export work with wharf clearence. Applicants should be able to communicate with institutions and Government Departments independantly. A good personality and a command of English language with a minimum of G.C.E. (O/L) will be an asset. Canvassing will be a disqualification. Salary negotiable. Applications in own handwriting close on 21st January '84. Newtone Electricals, 141, 143, Stanley Road, Jaffna. 115

## பதவி வெற்றிட அறிவித்தல்

### பருத்தித்துறை நகரசபை

பருத்தித்துறை நகரசபையின் வீதவரிகள் அறவிடுவதற்கு நான்கு நடுக்கட்டும் உத்தியோகத்தர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. விண்ணப்பிப்பவர்கள் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 30 - 01 - 1984. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாக அறிந்து கொள்ளலாம்.

நா. இராஜகுலம்,
செயலாளர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
27 - 12 - 1983. 140

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பட்டண எல்லைக்குள் கண்டிரோட்டில் கட்டிடத்துடன் 4 பரப்புக் காணி. வியாபாரம்/தொழிற் துறைக்கு ஏற்றது.

P. தேவேந்திரன்
கச்சாய் ரோட்,
சாவகச்சேரி. 066

## WANTED

Wanted an ELECTRICAL FOREMAN well Experienced in Maintanence of Industrial Electrical Installations Salary Negotiable.

**SRI RAMS TEXTILE PROCESSING Co. LTD.**
KONDAVIL ROAD, IRUPALAI, KOPAY. 128

## ரெலெக்ஸ் ஒப்பறேற்றேர்ஸ்

(இன்ரநாஷனல்)

செய்முறைப்பயிற்சி SIEMENS and SAGEM S. P. E. 5 and 7 (இருபாலாரும் சேரலாம்)

## Radio Officers (Ship) P. M. G.

செய்முறைப்பயிற்சி Morse - Sending/Receiving வகுப்புகள் நடைபெறுகின்றன.

**KEEN INSTITUTE**

இலத்திரன் பொறியியலாளர் திரு. S. குமாரசாமி
சிறும்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 131

## பதவி வெற்றிடங்கள்

அச்சுவேலியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் ''எவர் சில்வர்' இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திற்கு (Stainless Steel Utensil Industries) கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழுவிபரங்களுடன் 25-1-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.

1. பொது முகாமையாளர் (With Engineering Qulalification)
2. தொழில் முகாமையாளர்
3. Power Press Operators
4. ஸ்பின்னர்ஸ் (Automatic Spinning Machine Operators)
5. பொலிஷர்ஸ் (Polishers)
6. லேத்மென் (Lathemen)
7. வெல்டர்ஸ் (Welders)
8. உதவியாட்கள்
9. வேலை பழகுவோர்


அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல: 122

C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 122

## நன்றி நவிலலும் 31-ம் நாள் நினைவு தினமும்

### திருமதி அக்னேசக்கன்னி சந்தியாப்பிள்ளை



தோற்றம்: 17-8-41

மறைவு: 15-12-83

எங்கள் குலவிளக்காக ஒளிவீசி இக்குறுகிய காலத்துக்குள்ளேயே எம்மையெல்லாம் இருளில் மூழ்கடித்து விட்டு மறைந்துவிட்ட ஜோதியாம் என் மனைவியும்—எங்கள் முதன் மணியும்-எங்கள் அன்பு நிறை சகோதரியுமாகிய இவரின் நல்லடக்கத்தில் பங்குகொண்ட அனைவருக்கும், தந்திமூலம் அனுதாபம் தெரிவித்த யாவருக்கும், கடிதமூலமும் நேரிலும் ஆறுதல்கூறிய எல்லோர்க்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தக் குடும்பவிளக்கின் ஆன்ம சாந்திக்காக 14-1-84 சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு பரிசுத்த மரியன்னையின் பேராலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டிக்கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
கணவன், பெற்றோர்,
சோதரர், உறவினர்.

15/2, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். 130

# "சீனாவில் தாராள வர்த்தகக் கொள்கை; புதிய கைத்தொழில் நடவடிக்கைகள்!"

## சீனப் பிரதமர் ஷியாங் வாஷிங்டனில் அறிவிப்பு

வாஷிங்டன், ஜன. 13

"சீனாவில் தாராள வர்த்தகக் கொள்கை அமுல் படுத்தப்பட்டுள்ளது. புதிய பாணிகளில் வர்த்தக ரீதியாகப் புதிய நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் சீனாவில் வர்த்தக முயற்சிகளுக்கு இடம் தரப்படும்".

இவ்வாறு சீனப் பிரதமர் திரு. ஷாஓ ஷியாங் கூறினர். நேற்றுவெள்ளை மாளிகையில் சீனப் பிரதமரும், அமெரிக்க அதிபர் றீகனும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டனர் கைத்தொழில், தொழில் நுட்பத் துறைகளில் கூட்டாக இரு நாடுகளும் ஒத்துழைக்கும் விதத்திலேயே இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது

இதனைத் தொடர்ந்து சீனப் பிரதமர் திரு. ஷாஓ ஷியாங் அமெரிக்கப் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. ஷியாங் மேலும் பேசுகையில், "அமெரிக்கா, சீனா ஆகியன எதிர்காலத்தில் கைத்தொழில் தொழில்நுட்பத் துறைகளில்

(6ம் பக்கம் பார்க்க)

## 107 இந்திய கைதிகள் விடுதலை

இஸ்லாமாபாத், ஜன. 13

பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த 107 இந்தியர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். விரைவில் மேலும் 46 பேர் விடுதலை செய்யப்படுவர்.

இவர்கள் அனைவரும் பாகிஸ்தானில் அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு மேலாகக் கூடுதல் நாட்களைச் செலவிட்டவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## அங்கோலாவுக்கு உதவிகளை அதிகரிக்க சோவியத், கியூபா முடிவு!

லண்டன், ஜன. 13

அங்கோலாவுக்கு மேலும் கூடுதலாக இராணுவ உதவி வழங்க சோவியத் யூனியனும், கியூபாவும், முடிவுசெய்துள்ளன.

தென்னாபிரிக்காவின் ஊடுருவல்கள் அங்கோலாவில் அதிகரித்திருப்பதையடுத்தே சோவியத், கியூபா ஆகியன மேற்கண்ட முடிவை எடுத்துள்ளன.

அங்கோலாவில் ஏற்கனவே கியூபாத் துருப்புக்கள் இருந்து வருகின்றன. இவை அங்கோலாவுக்கு ஆதரவாகவே இருந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கோலாவிலிருந்தும் கியூபாத் துருப்புகள் வாபஸாகும் பட்சத்திலேயே அங்கு தனது நடவடிக்கைகள் குறைக்கப்படுமென்று தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது. (கி)

## மேற்கத்திய இசைநடனத்துக்கு எதிராக பிரசாரம்

மாஸ்கோ, ஜன 13

மேற்கத்திய இசை, நடனம் ஆகியவற்றுக்கெதிராக சோவியத்தில் பலத்த பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இவை இளஞ்சந்ததியினரை வேகமாகப் பாதிப்பதாகவும், அவர்களுக்கு அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் ஆர்வத்தைக் குன்றச் செய்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கத்திய இசை, நடனம் என்பனவற்றுக்கெதிரான எதிர்ப் பிரசாரம் மாஸ்கோவிலேயே தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது. நாளடைவில் இது விரிவாக்கப்படும்.


HOTEL GNANAMS

Situated in the Heart of City
CLEAN COMFORTABLE ROOMS
WITH — A/C or NON A/C
FOR
Honey Mooners
AND
Holiday Lovers
where a feeling of informality prevails.
Also,
மேல் நாட்டு உள்நாட்டு உணவுகள், விசாலமான மண்டப வசதிகள் இவை அனைத்தையும் அமைதியான சூழ்நிலையில் வழங்குவது
ஹோட்டல் ஞானம்ஸ்
For more information Contact:
Manager
Hotel Gnanams
Telephone: 22082

★ பொங்கல் வாழ்த்துக்கள் ★

மக்கள் அனைவரும் அறத்தின் வழி நின்று,
ஆண்மையில் உயர்ந்து, ஈதலிற் சிறந்து,
ஏற்றத் தாழ்வின்றி வாழ்ந்து, ஐயந்திரிபறப் பேசி,
பொதுப்பணி புரிபவர்களுக்கு நல்ல ஆதரவு வழங்கி,
மங்களகரமாக எந்நாளும் இன்பம் பொங்க வாழ
மில்க்வைற் ஸ்தாபனத்தாரின்
★ பொங்கல் வாழ்த்துக்கள் ★




ரூபா 2-50

மில்க்வைற் உற்பத்திக்குக் கிடைக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே.

உங்கள் பயிர்களைப் பூச்சி புழுக்களிட மிருந்து பாதுகாத்துக் கொள்ளப்பாவியுங்கள்
அங்லோ-ஏஷியன்
மொனோகுரோடோபோஸ் 60%
பரத்தியன் 50%
விளைச்சளைப் பெருக்கச் சிறந்தது




அங்லோ - ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றர் பேங்க் கட்டிடம் கொழும்பு 1.

யாழ். சென்றல் கிளினிக்
YARL CENTRAL CLINIC
180, ஆஸ்பத்திரி வீதி-யாழ்ப்பாணம்.
போன்: 23366
(C. S. K. சந்திக்கு அருகாமையில்)
வைத்தியசாலையும்
வைத்திய நிபுணர்கள்
ஆலோசனை நிலையமும்
★ இங்கு சகலவைத்தியசிகிச்சைகளும் நடைபெறும்.
★ சகல வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள் பெறுவதற்கு இவ் வைத்திய நிலையம் வசதி செய்து கொடுக்கும்.
★ ஆய்வு கூட பரிசோதனைகளும் செய்து கொடுக்கப்படும்.
★ இவ் வைத்திய நிலையம் தினசரி காலை 7 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை (விடுமுறை நாட்கள் உட்பட) திறந்திருக்கும்.
குறிப்பு! ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பநல ஆலோசனைகள் (Family Planning) இலவசமாக அளிக்கப்படும்.
064

### மணிவாக்கு

பக்தனின் வலிமை எதில் உள்ளது?
அவன் கடவுளின் குழந்தையாகின்றான்.
அவன் சிந்தும் பக்திக் கண்ணீரே
அவனுடைய வலிவுமிக்க ஆயுதமாகும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

# பொது எதிரியை ஒழிக்க ஒற்றுமைப்படுக

யாழ்ப்பாணம் இன்று ஒரு முற்றுகையிடப்பட்ட கோட்டைபோல் காணப்படுகிறது.

பல இடர்களைச்சமாளிக்கப் பழகிய இப்பகுதி மக்கள் ஒரு பொது எதிரியின் சவாலை ஏற்று ஒழித்துக்கட்டுவதில் தயங்குகின்றனர், இதுவே மிகப்பெரும் விரக்திக்குக் காரணமாகின்றது.

திட்டமிட்டு கொள்ளையடிக்கும் கோஷ்டியினர், பல பிரிவுகளாகவும், சிறு குழுக்களாகவும், தனிப் பட்டதாக்குதல் மூலமும், பெருங்கொள்ளையில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஆயுதந்தாங்கிய கொள்ளையினர் நாட்டின் பல பகுதிகளிலும் காணப்பட்ட போதும் யாழ்ப்பாணத்தில், இது நாளுக்கு நாள் அதிகரித்து மோசமான நிலையை எட்டியிருக்கிறது.

இரண்டு காரணங்கள் இதற்கு மிக முக்கியமாகத் தோன்றுகின்றன.

ஒன்று; யாழ்ப்பாணம் ஒரு பயங்கரவாத நிலையம் என்ற பொது அபிப்பிராயம் பரவலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அரசியல் ரீதியில் அதன் அடிப்படையில் நடைபெற்ற சம்பவங்களில் வன்செயல்கள் இடம்பெற்றதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார். அதனைப்பயன்படுத்தி கொள்ளையர்கள் முன்னேறுகின்றனர்.

மற்றது: வெளிநாடு செல்ல, உடனடி பணம் தேவை; தெருவில் தாலிக்கொடியும், வீட்டில் பணமும், நகைகளும் பாதுகாப்பற்ற வங்கிகளே!

ஒருவித குழப்பநிலை ஏற்பட்டுவிட்டால், நெய்க்குடம் உடைந்தது நாய்க்கு வேட்டைபோல அமைதி இழந்திருக்கும் இப்பிரதேசம் கொள்ளை நாய்களுக்கு வேட்டை நிலமாகி விடுவது அதிசயமல்ல.

கடந்த சில தினங்களாக தாலிக்கொடி அறுத்தல் பெருந்தொகை நகைகளும் பணமும் கொள்ளையடித்தல் போன்ற சம்பவங்கள் மிக ஒழுங்காக ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்றிருக்கின்றன.

ஆயுதந்தாங்கிய கூட்டத்தினர் ஒருபுறம், போலித்துப்பாக்கியின் துணைகொண்டு வழிப்பறி நடத்துவோர் மறுபுறம். எனவே ஏற்கனவே நாம் விடுத்த எச்சரிக்கையை பொதுமக்கள் நூற்றுக்கு நூறு ஏற்றேயாகவேண்டும்.

வெளியில் போகும் பெண்கள். பாதுகாப்பு உண்டோ இல்லையோ, கோவிலுக்கோ கடைத்தெருவுக்கோ, வேறெந்த அலுவலுக்கோ தாலிக்கொடி நகைகள் அணிந்து போவதை தற்காலிகமாகக் கைவிடவேண்டுமென்பது எமது தெளிவான கோரிக்கை.

இதனை இலகுவில் ஏற்றுக்கொள்ள முடியாததற்கு காரணங்கள் உண்டு. இருப்பினும் எதிர்பாராத விளைவுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் தாலிக்கொடி போன்ற பெருங்கொள்ளை வழிப்பறியிலிருந்து நீக்கப்பட்டுவிடும்.

அமைதியீனம் இம்மாவட்டத்தில் தொடரக்கூடும் என்ற அச்சம் இருக்கும் வேளையில் பொது எதிரியான ''கொள்ளையரை' நாம் திட்டமிட்டு ஒழித்துக்கட்ட வேண்டும்.

இது இலகுவானதல்ல என்றபோதும், பொதுமக்கள் ஒன்றுபட்டால் இது கைகூடுமென்பது தெளிவாகின்றது.

அதற்குச் சான்று. இன்றைய நிலையில் நாம்காணும் திருத்தம். பல இடங்களில் கொள்ளைக்காரர்கள் கையும் மெய்யுமாக அகப்பட்டிருக்கின்றனர். ஆண்மையும் நேர்மையும் நிறைந்த மக்கள் கூட்டம் இவ்வித தீரச்செயலில் வெற்றிபெற்றிருக்கின்றது.

அதனைவிட பொலிஸாரும் பொதுமக்களும் ஒற்றுமைப்பட்டு நடந்தேறிய கொள்ளைகளை ஆராய்ந்து பிடித்திருக்கின்றனர். இன்றைய அபாயகரமான சூழ்நிலையில் பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு கமிட்டிகள் மிக விழிப்புடன் செயலாற்றுவது பெரும் ஆறுதல் அளிக்கிறது.

யாழ்ப்பாணம் ஒரு சின்ன 'சிக்காகோ' (Chicago) என்ற பட்டத்தை இலகுவில் பெறுமோவென்ற அளவிற்கு பட்டப்பகலில் இங்குள்ள மிகப் பெரிய ஸ்தாபனங்களுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது; அதற்கேற்ப சட்டமும் இறுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வித சமூகத் துரோகிகளுக்கு பொதுமக்கள் எவரும உடந்தையாகவிருப்பாரானால் எங்கள் எதிர்காலம் சூன்யமென்பதை உறுதியாகக் கூறமுடியும்.

இதற்கு நேர்மாறாக, ஆண்மைநிறைந்த வாலிபர், பொதுநல அபிமானிகள், பொலிசாருடன் சேர்ந்தோ, அல்லது தங்கள் ஒழுங்கமைத்த திட்டத்துக்கேற்கவோ இந்த அபாயநிலைக்கு முடிவுகட்ட முன்வந்தால் நாளைக்கு நடைபெறும் பொங்கல் எங்களுக்கொரு விடிவாக அமையும்.

மக்கள் சார்பில் இந்தச் சாபக்கேட்டை ஒழித்துக்கட்ட முன்வரும் தொண்டர்கள் சிலவேளைகளில் அசம்பாவிதங்களுக்குட்பட்டால் பொலிசார் அதுபற்றி கண்ணியமாக நடந்துகொள்வரென நம்புகின்றோம்.

### ஊர்காவல்படைகளுக்கு நியமனப்பத்திரம்

(மன்னார்)

தலைமன்னார் பகுதி ஊர்காவல் படையினருக்கு நியமனப்பத்திரங்களை வழங்கும் வைபவம் தலைமன்னார் பொது மண்டபத்தில் மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

## "கோரிக்கை நிறைவேறும் வரை

# வேலைக்குத் திரும்புவதில்லை'

## பாதிக்கப்பட்ட ஊழியர் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட ஊழியர்களில் வேலைக்குத்திரும்பாத அனைவரும், இணைப்புக்குழுவின் கோரிக்கைகள் நிறைவேறும் வரையும் வேலைக்குத் திரும்புவதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இணைப்புக் குழு மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டம் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதோடு மாணவர்கள் பிரச்சனையைத் மனிதாபிமானத்தோடு தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி தலையிட வேண்டும் என்றும் அவசரத்தந்தி ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஊழியர் தொடர்பாக அமைச்சரவை அங்கீகரித்துள்ள தீர்மானங்கள் பற்றிய சுற்றறிக்கை வெளிவந்ததும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்குழு மீண்டும் கூடி ஆராயவுள்ளது.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் எதிர்கால தொழில் வளத்துக்கான தேவையான ஆலோசனைகளை இவ்விணைப்புக்குழு வழங்குமென்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (மா)

### மட்டுவிலில் அடையாள உண்ணாவிரதம்

(மட்டுவில்)

வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக மட்டுவில் வேரகேணி கந்தசுவாமிகோவில் முன்றலில் நேற்றுக்காலை 6 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்கள், மாணவிகள், பெற்றோர், பொதுமக்கள் என சுமார் 400 பேர் இங்கு உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இது ஒரு அடையாள உண்ணாவிரதமே என்றும் மாணவர் பிரச்சனை தீராத பட்சத்தில் வேறு இடங்களிலும் இது நடத்தப்படும் என்று அதில் கலந்து கொண்ட ஒருவர் கூறினார்.

## மக்கள் கருத்து

### ஈழநாடு பஞ்சாங்கம்

அண்மையில் வெளியான 'ஈழநாடு' 1984 பஞ்சாங்கம் பள்ளிக்கூடம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பட்டி தொட்டியெல்லாம் பரவியிருக்கவேண்டிய தரத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் இலங்கையின் வரலாற்றினைப் பிழையின்றி முறையாக எழுத முற்படும் பேராசிரியர்களுக்கும் மற்றையோர்க்கும் தேவையான பல 1983ம் ஆண்டுச் செய்திகளை இரைமீட்டுள்ளது போற்றத்தக்கது.

இப்பஞ்சாங்கத்தின் சிறப்பினை மேலும் உயர்த்திவைத்திருப்பது தமிழ்ப் பெரியாராகிய இந்துபோட் இராசரத்தினத்தின் படத்தினை மத்தியில் பொறித்திருப்பதாகும். இது தற்காலத் தமிழ்ச் சிறார்களும் மற்றையோரும் இவர் யாரென அறிவதற்கு வழிவகுத்துள்ளது.

இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் சட்டத்தரணியாகவும், சட்டசபை அங்கத்தவராக இருந்தும் கடைசிவரை தமிழ் மக்களின் கல்வியை உயர்த்துவதற்காக இராப் பகலாகத் தனது வாழ்வின் முழுப் பகுதியையும் அர்ப்பணித்தவர். கல்வி கற்பதற்கு வசதியற்ற பல இந்துச் சிறார்களை சைவசமயச் சூழலில் திருநெல்வேலியில் இவரால் அமைக்கப்பட்ட சைவ அனாதை இல்லம் மூலம் உயர்வடையச் செய்தார். அத்துடன் இந்து ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கு ஒரு சைவாசிரிய கலாசாலையையும் அமைத்தார். பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திரமுனைவரை இந்துத் தமிழ் மக்களின் சிறார்கள் கல்வி கற்பதற்குப் பல பாடசாலைகளை அமைத்தார். இப்படியெல்லாம் பல தொண்டுகளைச் செய்த அவரை அரசுகூடக் கௌரவித்து முத்திரை வெளியிடாத போதும், தாங்கள் தங்கள் பத்திரிகையின் பஞ்சாங்க மூலம் அவரின் படத்தினை வெளியிட்டுக் கௌரவித்தமை இந்துத் தமிழ் மக்களைக் கௌரவித்தமைக்குச் சமனாகும். இப்பஞ்சாங்கம் ஒவ்வொரு பாடசாலையிலும், வியாபார நிலையங்களிலும், தமிழ் பேசும் மக்களின் இல்லங்களிலும் இருப்பது சாலச் சிறப்புடைத்து.

க. சி. இராஜேஸ்வரன்,
92, ஆடியபாத வீதி,
நல்லூர்.

## விஷ்ணு தோத்திரம்

ஓருரு வில்லாய் போற்றி
ஒப்பிலா மணியே போற்றி
பேருற வானாய் போற்றி
பேதகஞ் செய்வாய் போற்றி
நீருறு நிறைவே போற்றி
நிகமா கமாத்தாய் போற்றி
சீருறு விழியாய் போற்றி
திருமாலே போற்றி போற்றி

அறந்தரு மமுதே போற்றி
அரிபரந் தாமா போற்றி
மறங்கெடு மருந்தே போற்றி
மாதவர்க் கெளியாய் போற்றி
புறம்புறந் திரிவாய் போற்றி
புகலிட மாவாய் போற்றி
சிறந்தவாழ் வொளியாய் போற்றி
திருமாலே போற்றி பேற்றி

வேணுகோ பாலா போற்றி
வேதனைப் பயந்தாய் போற்றி
காணுரு வண்ணா போற்றி
கருணையின் கனிவே போற்றி
நாணுமா றருள்வாய் போற்றி
நரசிங்க மானாய் போற்றி
சேணுலா வொளியாய் போற்றி
திருமாலே போற்றி போற்றி

கிருஷ்ண முகுந்தா போற்றி
கீதோப தேசா போற்றி
பிருந்தா வனத்தாய் போற்றி
பேரின்ப மயத்தாய் போற்றி
அருந்தவ யோகா போற்றி
அனந்தநா கணையா போற்றி
திருந்தவே செய்வாய் போற்றி
திருமாலே போற்றி போற்றி

வெண்ணெயை யுண்டாய் போற்றி
வேள்விகள் காத்தாய் போற்றி
மண்ணினை யளந்தாய் போற்றி
மாயங்கள் புரிந்தாய் போற்றி
கண்ணினிற் கலந்தாய் போற்றி
கதிபெற வருள்வாய் போற்றி
திண்ணமாந் திகழ்வே போற்றி
திருமாலே போற்றி போற்றி

வானவர்க் கரியாய் போற்றி
வைகுந்த வாசா போற்றி
கானவா ரிதியே போற்றி
கருடவா கனனே போற்றி
தீனரைக் காப்பாய் போற்றி
தீந்தமிழ்ச் சுவையே போற்றி
தேனமர் கழலாய் போற்றி
திருமாலே போற்றி போற்றி.

— ச. தங்கமாமயிலோன்.

### இந்திய எதிர்க்கட்சிகள் மகாநாடு

புதுடில்லி, ஜன 13

பெங்களூரில் இந்திய எதிர்க்கட்சித் தலைவர்களின் மகாநாடு ஆரம்பமாகிறது இதில் பல்வேறு அரசியல் கட்சிகள் கலந்துகொள்கின்றன.

'வேலையில்லாப் பிரச்சனை, தொழிலாளர் பிரச்சனை, தொழிற்சாலைகள் நிர்வாகம், நிர்வாக அமைப்பு, தேர்தல்கள், இந்திரா காங்கிரஸ் ஆட்சியில்லாத மாநிலங்களின் நிலை ஆகியனபற்றி இந்த எதிர்க்கட்சிகள் மகாநாட்டில் விரிவாக ஆராயப்படுமென்று மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. ஜோதி பாசு தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் இந்திய ஆளுங்கட்சியான இந்

(8-ம பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக சாவகச்சேரித் தொகுதியில்
# சைக்கிள் ஊர்வலம்

(சாவகச்சேரி)

பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சாவகச்சேரித்தொகுதி மாணவர்கள் ஆர்ப்பாட்ட சைக்கிள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

யாழ் பல்கலைக் கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கும் மாணவர்களின் போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது.

சுமார் 500 மாணவ மாணவிகள் இந்த சைக்கிள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கச்சாயில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் அல்லாரை, மீசாலை, மட்டுவில், நுணாவில், ஊடாக கண்டி வீதிக்கு வந்து கைதடியை அடைந்து அங்கிருந்து கோதீவு வீதி ஊடாக நாவற்குழியை அடைந்தது.

சுலோகங்கள் பலவற்றை தாங்கியவாறு கோஷங்கள் எழுப்பிய வண்ணம் இந்த சைக்கிள் ஊர்வலம் தொடர்ந்தது!

வழியெங்கும் பொதுமக்களும் பொதுஸ்தாபனங்களும் ஆதரவு தெரிவித்து தாகசாந்தி வழங்கிஊர்வலத்தை வரவேற்றனர். (க)

## பத்துலட்சம் வீடமைப்புத்திட்டம்

[மன்னார்]

பிரதமரின் பத்து லட்சம் வீடுகள் திட்டத்தின் இரண்டாவது வீடு மன்னார்- முதலைக்குத்தி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் முதலாவது வீடு அகில இலங்கை ரீதியில் பொலன்றுவை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் பத்துலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் சிறந்த முறையில் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

## கட்டிடத் திறப்புவிழாவும் கலைவிழாவும்

(யோகபுரம்)

துணுக்காய்ப் பிரிவைச் சேர்ந்த யோகபுரம் மூவேந்தர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கெனப் புதிதாக நிறுவப்பட்ட கட்டிடம் எதிர்வரும் இந்து புதவருட தினத்துடன் திறந்து வைக்கப்படுமென்று சங்கத்தலைவர் டாக்டர் வி. வேதநாதன் தெரிவித்தார்.

இக்கட்டிடம் தைப்பொங்கலுடன் திறந்து வைப்பதாக முதலில் தீர்மானிக்கப் பட்டிருந்தது. புதிய கட்டிடத் திறப்பு விழாவின்போது கலை நிகழ்ச்சிகளும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வயலிருப்பைப்பதி (ஆலடி) ஸ்ரீ வைரவ சுவாமிகோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 19ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

ஆலயத்தில் 16ம் திகதி கணபதி ஹோமம், நலக்கிரக ஹோமம் என்பன இடம் பெற்று 17ம் திகதி விசேஷ சாந்தி, யாகபூசை நடைபெறும் 18ம் திகதி எண்ணெய் சாத்துதல் வைபவம் இடம் பெற்று 19ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். (சூ)

## வரப்பெற்றோம்

சஞ்சிகை: காப்புறுதி.

வெளியீடு: இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடான 'காப்புறுதி' என்னும் சஞ்சிகை வெளிவந்துள்ளது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவந்துள்ள இச்சஞ்சிகையில், பிரதிநிதியும் காப்புறுதி முகவர் தொழிலும், பணம் என்றால் என்ன? இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒரு வரலாற்று நோக்குப் போன்ற கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சிங்கள மொழியிலிருந்து நேரடி மொழி பெயர்ப்பாக இருப்பதனால் தமிழ் மொழியில் அமைந்த கட்டுரைகளில் சொற்பிரயோகம் தெளிவில்லாமல் இருக்கிறது ஆயினும் வாசித்துப் பயன்பெறக்கூடிய சஞ்சிகை என்பதனை மறுப்பதற்கில்லை.

ஏ. பி. சூரியகாந்தன்

# யாழ். இந்து தந்த தம்பு சேனாதிராசா

நைஜீரியாவில் ஆசிரியராகவிருந்த திரு. தம்பு சேனாதிராசாவின் சடுதியான மறைவு, இங்குள்ள பல பழைய மாணவர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர்களுக்குப் பெரும் அதிர்ச்சி தருவதாகும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியுடன் மாணவனாகவும், ஆசிரியராகவும் சுமார் 32 ஆண்டு காலம் தொடர்பு கொண்டிருந்த இப்பெருமகன், இக்கல்லூரியில் நெடுங்காலம் ஆசிரியராகவிருந்து இளைப்பாறிய அமரர் பி. தம்புவின் மகனாவார்.

மாணவப் பராயத்தில் திரு. தம்புசேனாதிராசா கல்லூரியில் ஒரு சிறந்த மாணவனாகவிருந்தார். கிரிக்கெட் அணிகாப்டனாகவும், கல்லூரி சஞ்சிகை பத்திராதிபராகவுமிருந்தார்.

கல்லூரியிலிருந்து அரசாங்க வானிலை அவதான நிலையத்தில் தொழில் வாய்ப்புப்பெற்றார். ஆனால் அவர் அங்கு தொடர்ந்து பணிபுரியவில்லை. மீண்டும் தாம்பயின்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கே ஆசிரியராகத் திரும்பினார்.

வகுப்பறையில் திரு. சேனாதிராஜா ஒருசிறந்த புவியியல் ஆசிரியர். கூடவே கணிதம், பௌதீகம் ஆகியவற்றைப் போதிப்பதிலும் சிறந்து விளங்கினார் இதனால் அவரது மாணவர்கள் பீ. ஏ, பீ, எஸ். ஸி. என்று இரு பட்டதாரி பட்டங்களை அவர் கொண்டிருந்திருக்கலாம் என நினைத்தனர்.

விளையாட்டு மைதானத்திலும்இவர்ஒருசிறந்த பயிற்சியாளராகவும், தெரிவாளராகவும், அவசியமேற்படும் போது விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவுமிருந்தார்.

அலுவலகத்தில் ஒருமாணவன் பற்றிய ஒழுங்குப்பிரச்னை எழுந்தால் அம்மாணவன் பற்றிய சகல தகவல்களையும் கொடுத்து அவனை நல்வழிப் படுத்தும் ஒருசிறந்த ஆசானாக விருந்தார்.

ஏற்பாடு செய்யவேண்டிய நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்கள் தொடர்பிலும் இவர் ஒரு விடாமுயற்சியாளர் சலிப்படையாது சகலதையும் மேற்கொள்வார். பழைய மாணவர்களுக்கும் கல்லூரிக்கும் இவர் ஒரு பாலமாகவிருந்தார். அத்துடன் பழைய மாணவர்கள் இக்கல்லூரிக்கு வழங்கவேண்டிய பங்களிப்பையும் இவர் அவ்வப்போது வலியுறுத்துவதுண்டு.

திரு. சேனாதிராசா சகலவிடயங்களையும் ஒழுங்காக ஏற்பாடுசெய்வதில் மட்டும் நின்றுவிடவில்லை. அவற்றை பூரணமாக நடைமுறைப்படுத்துவதிலும் கடுமையாக உழைத்தார். அதுவே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அவரின் பெரும் பங்களிப்பாக இருந்தது.

1973ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலிருந்து இவர் நைஜீரியா பயணமானார், அங்கு கடந்த பத்தாண்டு காலமாக ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் கடந்த ஆண்டு டிசம்பரில் இறையடி சேர்ந்தார்.

வி. சிவசுப்பிரமணியம்

நைஜீரியா.

## ஜனாதிபதிக்குதந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. ஊழியர் தொழிற்சங்கம் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்படிகோரி ஜனாதிபதிக்கு தந்தி அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி கூட்டுறவுச்சங்க ஊழியர்கள், சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் மாணவர்களுக்கு ஆதரவாக ஒரு நாள் உண்ணாவிரதமிருக்கவும் முடிவுசெய்துள்ளதாக தொழிற் சங்க ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)


# பரிசு ரூ. 500

## கிடுகுவேலி

# வாசகர் போட்டி

நீண்ட காலத்திற்குப் பின்னர் ஈழத்து வாசகர் மத்தியில் பரபரப்பான தொடர் நாவல் என்ற புகழைச் சம்பாதித்திருப்பது 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்து கொண்டிருக்கும் 'கிடுகுவேலி' தொடர் நவீனம். வாராவாரம் காத்திருந்து 'கிடுகுவேலி' யைப் படித்து அதன் சுவையைக் கடிதங்கள் மூலம் பலர் பாராட்டி வருகிறார்கள்.

எனவே, வாசகர்களே, உங்களுக்காக

## இதோ ஒரு போட்டி:

### 'கிடுகுவேலி தொடர் நாவலின் முடிவு எப்படி அமையும்?'

சுருக்கமாக உங்கள் முடிவை எழுதி அனுப்பி வையுங்கள். இத்தொடர் நாவலின் முடிவை வாசகர்கள் ஊகிக்க முடியுமா என்பதனை அளவிட்டுக்கொள்வதற்கு இது ஒரு பரீட்சையாகும். இப்பரீட்சையில் தேறும் வாசகர்களுக்கு அதாவது நாவலின் முடிவைச் சரியாக எழுதி அனுப்பும் வாசகருக்கு

### 500 ரூபா பரிசு வழங்கப்படும்!

இப்பரிசுத் தொகையை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சம்பந்தன் வைத்தியசாலையும் வைத்திய ஆலோசனை நிலையமும் நிறுவனத்தினர் வழங்குகின்றனர்.

## முடிவு திகதி: 22-1-1984

அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர், வாரமலர்,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'கிடுகு வேலி வாசகர் போட்டி' எனக் குறிப்பிடவும்.

★ இப்போட்டியில் 'ஈழநாடு' ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றமுடியாது.


## நாட்டில் பலத்தமழை

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் பலத்தமழை பெய்துள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில ஆகக்கூடிய மழை பெய்துள்ளது.

இம் மழையினால் திருகோணமலை, அநுராதபுரம் பகுதிகளிலுள்ள பெரும்பாலான குளங்கள் நிரம்பியுள்ளன. ஹொரவப்பொத்தானை அநுராதபுரப்பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. மல்வத்த ஓயா பகுதியில் 80 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளன. (சூ)

## தெங்கு பனம்பொருள் சங்கக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் [illegible]தினொராவது வருடாந்தக் கூட்டம் 21ம் திகதி நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் திரு எம். கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப் பொதுக்கூட்டத்தில் கூட்டுறவு ஆக்க உதவிஆணையாளர் திரு எஸ் வேலாயுதபிள்ளையும் இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.


# ஹோம் பிரண்ஸ் லிமிட்.

## உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிரண்ஸ் லிமிட்.
   இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 24810
2. நியூ ப்ரசீதா
   இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22480
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
   இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 22537, 22370
4. நியூ லங்கா அலுமீனியம் இன்டஸ்ரீஸ் விற்பனவு நிலையம்
   இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 23096

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிரண்ஸ் லிமிட்.
463 காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலா ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: [illegible]3277

# ஊரெழு பகுதியில் புதிய தொடர்பு சபை!

(ஊரெழு)

ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் ஏற்கனவே இயங்கிவந்த பொலிஸ்-பொதுமக்கள் தொடர்புச் சபைக்குப் பதிலாக ஏழு உறுப்பினர்கள் அடங்கிய புதிய தொடர்பு சபையொன்று அமைக்கப்படவேண்டும் என்ற பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்க ஊரெழு கிராமசேவை அலுவர் பிரிவிலும் புதிய தொடர்புச் சபையொன்று அமைக்கப்பட்டு இம்மாதத்திலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

இந்தச் சபையில் திரு. செ. அழகராசா தலைவராகவும், திரு மு. சங்கரப்பிள்ளை செயலாளராகவும், ஏனைய உறுப்பினர்களாக திருவாளர்கள் சு. நாகலிங்கம், க. முத்துக்குமாரசாமி, சு சபாரத்தினம், அ. வைரமுத்து, சி. கணேசன் ஆகியோர் நியமனம் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடபிரதேச பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியினதும், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினதும் கையொப்பங்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஊரெழு கிராமசேவை அலுவலர் திரு. அ. க. த கிருஷ்ணராசா மேற்படி தொடர்புச் சபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராகப் பதவிவகிப்பார்.

பொலிஸ் — பொதுமக்கள் தொடர்புச் சபைக்கும், சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கும் இடையிலான தொடர்பு உத்தியோகத்தராக சார்ஜன்ட் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் கடமையாற்றுவார். (க)

# வெள்ளாங்குளத்தில் ஒரே இரவில் 5 வீடுகளில் ரூ. 2 லட்சம் நகை கொள்ளை!

(துணுக்காய்)

மன்னார் பூநகரி பிரதான வீதியில் உள்ள வெள்ளாங்குளத்தில் ஏழுபேர் கொண்ட கோஷ்டியினர் ஐந்து வீடுகளில் துப்பாக்கி காட்டி ஆகாயத்தில் சுட்டுப்பயமுறுத்தி இரண்டு லட்சம் ரூபா பெறுமதியுள்ள நகைகளைக்கொள்ளையடித்துள்ளனர்.

அங்கு நின்ற சாரதியைப் பயமுறுத்தி உழவுயந்திரத்தை கடத்திக்கொண்டு துணுக்காய் பாதைவழியாக வரும்போது இடையில் யந்திரத்தை நிற்பாட்டச் சொல்ல சாரதி நிற்பாட்டியதும் கொள்ளையர் இறங்கி தாம் கொண்டு வந்த சாராயத்தை குடித்துவிட்டு ஒருவருக்கொருவர் சண்டை பிடித்தார்களாம்.

இதைப் பயன்படுத்திய சாரதி தமது டிராக்டரை எடுத்துக் கொண்டு வேகமாக துணுக்காய் வந்து கிராமசேவகரிடம் முறைப்பாடு செய்தாராம். கிராமசேவகர் கு. ஞானேஸ்வரன் மன்னார் பொலிசுக்கு அறிவித்து பொலிசார் வந்து தேடுதல் நடாத்தினார்கள் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை டிராக்டர் மன்னார் பொலிசில் நிறுத்தி வைக்கப்பட்டு பொலிஸார் தீவிர தேடுதல் காடுகளில் நடத்துகின்றனர்.

## யாருடையது?

யாழ். மார்ட்டின் வீதியைச் சேர்ந்த திரு. க. தவராசா என்பவர் ஐந்து திறப்புக்கள் கொண்ட ஒரு திறப்புக் கோர்வையையும், நல்லூர் கமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த திரு. கா. சிவராசா என்பவர் திறப்புக் கோர்வை, காசோலைகள் அடங்கிய ஒரு கைப்பையையும் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 29ம் திகதி
சனிக்கிழமை
(14-1-84)

மேடம்; சிந்தனைத் தாக்கம், சிறு சச்சரவுகளை உருவாக்கும், திடீர் முடிவுகளை தவிர்த்துக் கொள்ளவும், ஆத்திரத்தை அடக்கி அன்பாக நடந்து கொள்க.

இடபம்: குடும்பத்தில் சிறிய பூசல் தலைதூக்கும். மனதில் அமைதி குன்றும். விஷமிகள் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும். அடக்கம் நன்று.

மிதுனம்: பணமுடை தீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை தென்படும். சொற்சிலம்பம் ஆடுவீர்.

கடகம்: கருத்துவேற்றுமைகள் கலகத்திற்கு இடமளிக்கும். சகோதரர் விடயத்தில் பொறுமை நன்று. சிறிய பயணங்களுமுண்டு.

சிங்கம்: ஊதியம் வளரும். உற்சாகம் பெருகும். உறவினர் வாழ்த்தும் இதயத்தில் ஊற்றெடுக்கும். தாய்வழித்தனமுடன் செல்வாக்கும் உயரும்.

கன்னி: இன்பத்தின் அணைப்பில் இதயத்தை பறிகொடுப்பீர். மக்கள் புகழ்ச்சி தந்திடும் மகிழ்ச்சி. பொருளாதாரத் துறையில் நிறைய உதவியுண்டு

துலாம்: பாகையாளிகள் உறவாடிக்கெடுக்க முன்வருவர். உற்சாகம் குன்றும். பொருள் கைநழுவக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் தென்படும்.

விருட்சிகம்: ஆனந்த வாழ்க்கையுடன் அன்பர்களின் ஆதரவும் கிட்டும். சிலருக்கு திடீர் திருமணங்களும் இடம்பெறும். மகிழ்ச்சிகரமான தினம்.

தனுசு: கழுகுப்பார்வை வட்டமிடும். கருத்தினில் வேற்றுமை தோன்றும். தொல்லைகள் அதிகரிக்கும். நில், நிதானி அமைதியுடன் செயல்படு.

மகரம்; இல்லம் கட்டி வெல்லம். பெரியோர் ஆசியும் ஆதரவுமுண்டு. எதிர்பார்த்த வரவிலும் திருப்தி காணப்படும். நல்ல தீர்ப்பும் வழங்குவீர்.

கும்பம்: பயணங்கள் ஆரம்பிக்கலாம். தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. வியாபாரிகளுக்கு உற்சாகம் பிறக்கும்.

மீனம்: வெற்றிமேல் வெற்றியுண்டு. பொருள்வரவும், பொன்னான வாழ்வும் உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரலாம். வரவேற்கவேண்டிய தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்




## 107 இந்திய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று குற்றஞ்சாட்டப்பட்டே கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு அடிக்கடி இந்தியர்கள் கூடுதல் நாட்களைச் செலவிட்டதாகப் பாகிஸ்தானில் கைது செய்யப்படுவதுண்டு.

நேற்று விடுதலையான 107 பேரும் இந்திய - பாக். எல்லையில் வைத்துத் தாயகத்துக்குள் விடப்பட்டனர்.

இதேவேளை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான கூட்டுக் கமிஷன்களின் பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளன இக் கூட்டுக் கமிஷனைச் சேர்ந்த நான்கு துணைக் கமிஷன்கள் பேச்சுக்களில் கலந்து கொள்ளும்.

இரு நாடுகளுக்குமிடையிலும் வர்த்தக, விஞ்ஞான ஆராய்ச்சிகள்பற்றி ஆராய்வதே இத் துணைக் கமிஷன்களின் முக்கிய நோக்கமாகவிருக்கும். இரு தினங்கள் இஸ்லாமாபாத்திலும், புதுடில்லியில் இரு தினங்களும் கூட்டுக் கமிஷன் பேச்சுக்கள் இடம்பெறும். (கி)

## சீனாவில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பல புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளும் விதத்திலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையிலுமே இவ்வொப்பந்தத்தைத் தயாரித்துள்ளன.

சீனாவில் வர்த்தக நடவடிக்கைகள் தாராளமாக்கப்பட்டுள்ளன. எக்காரணம் கொண்டும் அவை பழைய நிலைக்குக் கொண்டுசெல்லப்படமாட்டா" என்றார்.

அமெரிக்க அதிபர் றீகனும் இவ்வொப்பந்தம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். அமெரிக்கா சீனாவுக்குக் கைத்தொழில், தொழில்நுட்பத் துறைகளில் ஒத்துழைப்புக்களை வழங்குமென்று உறுதியளித்தார். [க]

## அன்னதானம்

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலைமன்னார் ஸ்டேசன் பள்ளி வாசலில் வைத்து அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்அன்னதானத்தை தலைமன்னார் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கச் செயலாளர் ஜனாப் ஜின்னா வழங்கினார்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
சிவாஜி — வாணிஸ்ரீ
**வசந்த மாளிகை**

**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
**OMAN II**
(action packed)

பொங்கல் வெளியீடு!
**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
**காற்றினிலே வரும் கீதம்**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
அரங்கு நிறைந்த மகத்தான 4-வது
மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**
(கலர்)
இசை: இளையராஜா

**ஹரன்** (யாழ். நகர்)
ஜனத்திரள் காட்சிகளாக
தினசரி 10-30, 2-30, 4-45, 7-15, 9-30
Dee Wallace - Patrick Macnee
in
**"The Howling"**
Adults only
இப்படம் திரையிடப்பட்ட போது அமெரிக்க மக்கள் இரவில் வெளியே நடமாட அஞ்சினார்கள். அந்த உருவத்தின் மர்மம் என்ன?

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00



சிவாஜி - சௌகார்
**பாபு** (புதிய பிரதி)

3-வது "பெண்திரள்" வாரம்
**றீகல்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15, 9-00



மோகன்... பூர்ணிமா
ஜெயராம்...
**பயணங்கள் முடிவதில்லை**
(ஈஸ்மென் கலர்)

## புறக்கோட்டையில் மீண்டும் தீ

(கொழும்பு)
புறக்கோட்டையில் நேற்று முன்தினம் இரவு 3 மாடி கட்டடத்தில் தீப்பிடித்ததால் பல கடைகள் சேதமடைந்தன.

தீயணைக்கும் படையினர், எடுத்த பெருமுயற்சியால் தீயைக்கட்டுப் பாட்டுக்கு கொண்டு வந்தனர் (இ)

15-1-84 வரை மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-ஜெய்சித்திரா
மஞ்சுளா-கமலஹாசன்
**சத்யம்**
(கலர்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றாம்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சௌகார் ஜானகி
**பட்டாக்கத்தி பைரவன்**

Grand Pongal Release!
**சாந்தி** (யாழ். நகர்)
13 — 17
10-30, 2-30, 4-45, 7-00
He wanted Adventure...
She Craved for Revenge...
Emeralds Held the Answer
OMAR SHARIF
RYAN ONEAL
**GREEN ICE**
Dont Miss this Action Suspense - Thriller Movie

## இன்று ஏகாதசிவிழா

(யாழ்ப்பாணம்)
அளவெட்டி தெற்கு ஸ்ரீநாக வரதநாராயணர் சுவர்க்க வாயில் ஏகாதசி விழா இன்று நடைபெறும்.

இன்று அதிகாலை பூசைநடைபெறும்.

இரவு பக்தி நிகழ்ச்சிகளும், வில்லிசை, மங்கள வாத்தியம் போன்றனவும் இடம்பெறும்.

0 0 0

(புலோலி)
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை இரவுவருடாந்தசுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வழக்கம் போல் நான்கு சாமப்பூசையும், புராணப்படிப்பும் நடைபெறவுள்ளது. மறுநாள் தைப் பொங்கல் துவாதசி உற்சவம் நடைபெறுமெனவும் தர்ம கர்த்தாசபை அறிவித்துள்ளது.

## மன்னாரிலும் பஸ் சேவை இல்லை

[மன்னார்]
மன்னாரில் நேற்று இ. போ. ச. பஸ்கள் ஓடவில்லை. என்றாலும் பொதுவான பாதிப்பு ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. தூர இடங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கான மினிபஸ் சேவைகள் நடைபெற்றன.

கடைகள் யாவும் திறந்திருந்தன. அலுவலகங்களும் செயல்பட்டன.

## ரூபவாஹினியில் இன்று

மாலை
6-00: பொம்மலாட்ட நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-25: சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-55: செய்திகள் (தமிழ்)
7-15: உலகின்சிறந்த பாடல்களை வழங்கும் நிகழ்ச்சி. (ஆங்கிலம்)
7 45: "பொம்பா த ஜங்கிள் போய்" (ஆங்கில நிகழ்ச்சி
8-15: செய்திகள் (சிங்களம்)
8-35: நாடகம் (சிங்களம்)
9-05: காதாம்பரி (பல்சுவை நிகழ்ச்சி தமிழ்)
9-30: செய்திகள் (ஆங்கிலம்)
10-00: 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' (துப்பறியும் சித்திரம்)
10-30: உலகச் செய்தித் தலையங்கள்.
10-35: துப்பறியும் சித்திரத் தொடர்ச்சி)
10 55: நிகழ்ச்சிகள் முடிவு

## தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் வரும் தைப் பொங்கல் அன்று திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீகாலி அம்மன் ஆலயத்தில் மன்றத்தலைவர் திரு க சொக்கலிங்கம் தலைமையில் தைப்பொங்கல் விழாவினை மிக அமைதியான முறையில் கொண்டாடவுள்ளனர்.


சொற்பொழிவு திருமுறை அரங்கு ஆகியனஇடம்பெறும்.

## பருத்தித்துறையில் மந்தநிலை

[புலோலி]
பருத்தித்துறையில் இ. போ. ச. பஸ்கள் எதுவும் நேற்றுஓடவில்லை. தனியார் வாகனங்களும் ஓடவில்லை. கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. தேநீர்க்கடைகள் சில சிறிது நேரம் திறக்கப்பட்டு மூடப்பட்டன. சந்தைகளில்சிலரே காணப்பட்டனர். வங்கிகள் நேரத்தோடு மூடப்பட்டன. அசம்பாவிதம் ஏதும் இடம்பெறவில்லை.

**செரம்பூர் பல்கலைக்கழக பட்டதாரி**
(SERAMPORE UNIVERSITY)
**இறையியல் வகுப்புகள்**
THEOLOGICAL CLASSES
(B. D., B. Th., B. R. E., D. R. K.)
இடம்: கிறிஸ்தவசேவ ஆச்சிரம், மருதனாமடம், சுன்னாகம்.
காலம்: சனிக்கிழமைகளிலும் போயா தினங்களிலும்
ஆரம்பம்: 4-02-84 சனிக்கிழமை காலை 9-00 மணி
**விண்ணப்பமுடிவு திகதி 31-01-1984**
விபரங்களுக்கு கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.
பதிவாளர்
மே/பா கிறிஸ்தவ சேவ ஆச்சிமரம்
மருதனாமடம் - சுன்னாகம்.
அல்லது: உங்கள் சபைக் குருவிடமோ கல்லூரி அதிபரிடமோ விபரங்களை அறிந்து கொள்ளலாம்.
குறிப்பு: தங்கும் வசதிகளுடன் முழுநேர மாணவர்களாக இருக்க விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.
09)

## 90-வது நாள் நினைவு அஞ்சலி



-தா. இரகுநாதன்-

மலர்வு :
25-08-1951

உதிர்வு :
17-10-1983

ராமேஸ்வரம் கடலில் தவறி அகால மரணமான கா. தாமோதரம்பிள்ளை தம்பதிகளின் புதல்வன் இரகுநாதனின் அந்தியேஷ்டிக் கிரியை இன்று (14—01—84) சனிக்கிழமை கீரிமலையில் நடைபெற்று யாழ்ப்பாணம் 56/2. இந்துக்கல்லூரி ஒழுங்கை இல்லத்தில் வீட்டுக் கிருத்தியம் நடைபெறும்.

பெற்றோர், மனைவி, மகன், ஜெயகாந்த் சகோதர சகோதரிகள்

124

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி

குலத்துங்கம் இராஜகுலசிங்கம்
(ஓய்வு பெற்ற மானிப்பாய் விதானையார்)



தோற்றம்: 14-1-1914 மறைவு: 04-12-1980

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(143)

பேராதனை, கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின்
**(வெளிநிலை) விரிவுரைகள்**
கல்வியாண்டு 1984
இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பாடநெறிகளான
- கலைமாணி
- விஞ்ஞானமாணி
- சட்டமாணி
- வணிகமாணி

ஆகியவற்றிற்கான தமிழ்மூல விரிவுரைகள்
க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும்
பயிற்றப்பட்ட ஆசிரியர்களும்
செப்டம்பர் மாத பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விபரத் திரட்டினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 5/- செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு திகதி 5-2-84 நீடிக்கப்பட்டுள்ளது.
**பட்டப்படிப்புக் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு:
விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்பும் முதல் 250 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
பட்டப்படிப்புகளுக்கென யாழ்நகரில் தனித்து இயங்கும் ஒரே நிறுவனம்

# உண்ணாவிரதமிருக்கும் மாணவர்களின் நிலைமை!

## அமிருக்குத் தொலைபேசியில் தகவல்

(யாழ்ப்பாணம்)

''சாகும்வரைஉண்ணாவிரதம் இருந்துவரும் மாணவர்களின் நிலைமை மோசமாகியுள்ளது. உடன் இதற்கு தீர்வுகாண நடவடிக்கை எடுங்கள்''

யாழ். முன்னாள் மேயர் திரு. இராஜா விசுவநாதன், நேற்று பிற்பகல் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மாணவர் தலைவரை இன்று நண்பகல் சந்தித்தேன். அவர் திரு. கல்பகேயைச் சந்திக்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

5 மாணவரும், 4 மாணவிகளும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஒரு மாணவியின் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. இப்பிரச்னையை உடன் தீர்க்காவிடில் நிலைமை மேலும் மோசமாகிவிடும்.

மாணவர் கோரிக்கை நியாயமானதென்பதை நான் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்கிறேன். (க)

## இந்திய எதிர்க்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திரா காங்கிரஸ் குறித்தும் நாட்டின் பொருளாதார நிலபரம் குறித்தும் எதிர்கட்சிகள் பல கண்டனம் தெரிவித்தன. இதனைத் தொடர்ந்தே இந்த மகாநாடு கூட்டப்படுகிறது.

தமிழக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தமது வேறு நான்கு சகாக்கள் சகிதம் இம்மகாநாட்டில் கலந்து கொள்கிறார். (கி)

## இரு கான்ஸ்டபிள்களின் மரணச் சடங்குகள்!

### கரவெட்டி, திக்கத்தில் நடந்தன

(கரவெட்டி)

துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான பொலிஸ் கான்ஸ்டபிள் வல்லிபுரம் சின்னத்தம்பி, தம்பிமுத்து துரைராசா ஆகியோரின் மரணச்சடங்குகள் கரவெட்டி சோனப்பு மயானத்திலும், திக்கம் மயானத்திலும் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றன.

பொலிஸ் அணிவகுப்பு, பான்ட் வாத்தியக் கோஷ்டிகளுடன் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம், கரவெட்டி உதவி அதிபர் திரு. இ. ஐயாத்துரை, பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு சபை அமைப்பாளர் சார்ஜன்ட் எஸ். புண்ணியமூர்த்தி ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. பிராங்டி. சில்வா, பொலிஸ் அதிபர் ரி. இ. ஆனந்தராசா, உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சிவசம்புதவலிங்கம், மற்றும் உதவிப் பொலிஸ் அதிபர்கள், பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. கே. மகேந்திரன் ஆகியோர் மலர்வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தினர். (மா)

## மரண அறிவித்தல்

### சி. செல்வரத்தினம்

மலாயன் பென்சனியரும், தொண்டைமனாறு ஆங்கிலப் பாடசாலை இளைப்பாறிய ஆசிரியருமான உரும்பராய் தெற்கு சின்னத்தம்பி செல்வரத்தினம் காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற எஞ்சினியர் கிருஷ்ணமூர்த்தி, பல்வைத்தியர் ஜெகநாதன், திருமதி சிவபாதசுந்தரம் செல்வமணி ஆகியோரின் தந்தையும், திருமதி பத்மா கிருஷ்ணமூர்த்தி, எஞ்சினியர் சிவபாதசுந்தரம், டாக்டர் வசந்தி ஜெகநாதன் ஆகியோரின் மாமனாருமாவார். இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை (14-1-84) மாலை 3-30 மணிக்கு உரும்பராய் வேம்பன் மயானத்தில் நடைபெறும். 149

## மரண அறிவித்தல்

### உடுவில் சி. வ. பிரான்சிஸ்

(இளைப்பாறிய ஆசிரியர்)

பதுளை சென்பீட்ஸ், கண்டி சென் சில்வெஸ்டர், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும், திரேசா நேசமலரின் அன்புக் கணவரும். F. A. மனோகரன் (DOHA) காலஞ்சென்ற யூலியற் வசந்தமனோகரி, இருபாகரன், தயாபரன் (கிங்ஸ்வைன் ஸ்டோர் கொழும்பு) லூர்த்சாந்தகுமாரி, அமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற சண்முகம், முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற செல்லத்துரை (ஓவசியர்), சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற அதிபர்), பேரின்பநாயகம் ஓவசியர் குருநாகல்), செல்வநாயகம் [சீமெந்து தொழிற்சாலை], குலநாயகம், பரமேஸ்வரி, தேவமலர், தவமலர் ஆகியோரின் மைத்துனரும், துரை [ஆசிரியர்]. யோகராசா (வைத்திய அதிகாரி), கந்தசாமி (இ. போ. ச.) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அன்னாரது இல்லத்தில் இருந்து இன்று (14-1 84) காலை 10.00 மணிக்கு மல்வத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திருமதி பிரான்சிஸ், இராமலிங்கம் வீதி, உடுவில்.

133

## யாழ். மாவட்டத்..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம தபால் நிலையம், யாழ். ஆஸ்பத்திரி, யாழ். கல்வித் திணைக்களம், மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், தனியார் துறை ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்ட அளவினரே கடமைக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் கல்லூரிகளும் முற்றுமுழுதாக மூடப்பட்டிருந்தன.

உணவு சிற்றுண்டிக் கடைகளும் திறக்கப்படவில்லை.

தனியாருக்குச் சொந்தமான சில வாகனங்கள் மாத்திரம் வீதிகளில் நடமாடின.

பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் வீதிகளெங்கும் வெறிச்சோடிக்கிடந்தன.

யாழ் மாவட்டத்தில் பிரதான சந்தையான சுன்னாகம் சந்தையில்கூட வியாபாரிகள், பாவனையாளர்கள் வெகுகுறைவாகவே காணப்பட்டனர்.

### கிளிநொச்சியிலும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடந்த இரு தினங்கள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (மா)

## காத்தான்குடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புப் பெட்டி திறக்கப்பட்டதும், மூன்று கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், இரண்டரை லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்து ஐந்து சாக்குகளில் கட்டிக்கொண்டு வங்கி ஊழியர்களைச் சத்தம் போடக்கூடாது என்று எச்சரித்துவிட்டுச் சென்றனராம்.

வெளியில் தயாராக நின்ற வான் ஒன்றில் கொள்ளையடித்த நகைகளையும், பணத்தையும் இளைஞர்கள் ஏற்றிக்கொண்டு களுவாஞ்சிக்குடி நோக்கிச் சென்றதாகவும் இதுவரை சந்தேகநபர் எவரும் கைதாகவில்லை என்றும், கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும், பணமும் மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரும், இராணுவத்தினரும், மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கரையோரப் பகுதிகளில் பலத்த கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்லடிப் பாலம், மற்றும் முக்கிய சந்திகளில், பொலிஸார் நின்று வாகனங்களைச் சோதனையிட்டு வருகின்றனர். (க)

## இப்படியும் நடக்கிறது

வடக்கு, கிழக்கில் மிகவும் உயர்பதவி வகிக்கும் சிலருக்கு அதி விரைவில உதவியாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனரா?

கொழும்பிலிருந்து கிடைத்த ஒரு செய்தி, இப்படி "கிசு கிசு'க்கிறது!

வடக்கு, கிழக்கில் குறிப்பாக—முதலில் யாழ். மாவட்டத்தில் உயர்பதவி வகிக்கும் இரண்டு தமிழ் அதிகாரிகளுக்கு சிங்கள அதிகாரிகளை உதவியாளர்களாக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம். இதில் ஒரு தமிழ் அதிகாரி யாழ். செயலகத்தைச் சேர்ந்தவர். மற்றவர் யாழ்ப்பாண மாநகர சபையைச் சேர்ந்தவர். இது காதில் விழுந்த செய்தி.

'ஊடுருவி'

## பத்திரிகையாளர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ச்சி பெற்றுள்ளார்.

கடந்த இருபத்தைந்து வருடகாலமாக தொடர்ச்சியாக ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருக்கும் பெருமைக்குரியவரான இவர் ஒரு சட்டத்தரணி, கொழும்பு சட்டக்கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

ஐம்பது ஆண்டு கால தமிழ் பத்திரிகை வளர்ச்சி குறித்து ஆராய்ச்சிக் கட்டுரை எம். ஏ தேர்வுக்கு எழுதியிருந்தார்.

பல்கலைக் கழகத்தில் வெளிவாரியாக இருந்து எம். ஏ. பரீட்சைக்கு தோற்றியவர்களில் இவர் ஒருவரே தேறியுள்ளார்.

## 4 அம்சங்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டில் சர்வகட்சி மகாநாட்டின் பேச்சாளர் அமைச்சர் திரு. அத்துலத்முதலி இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இன்றைய மகாநாட்டில் யாராவது வெளி நடப்புச்செய்தார்களா? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, ''அப்படியொன்றும் நடக்கவில்லை! காலையில் வந்தவர்கள் மாலையிலும் வந்தார்கள் என்று அமைச்சர் கூறினார்.''

காத்தான்குடி மக்கள் வங்கிக் கொள்ளை பற்றி நிருபர் குறிப்பிட்டு, கெரில்லாக்கள் செய்தார்களா? என்று கேட்டதற்கு, ''இங்கு கெரில்லாக்கள் இல்லை. பயங்கரவாதிகளும், கொள்ளைக்காரர்களுமே இருக்கிறார்கள்'' என்று பதில் கூறினார்.

## யாழ். சுங்க....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

4 பாவிக்கமுடியாத பழைய துவக்குகளும், பாவிக்கமுடியாத 2 வாக்கி டோக்கியும் கொள்ளையடிக்கப்பட்டன.

''75,000 ரூபா பெறுமதியான 3 வாக்கிடோக்கியும், ஒரு தொலைபேசி வானொலியும் களஞ்சிய அறையிலிருந்து 4 வீடியோடெக்கும், 14 ரேப் றெக்கோடரும், நாலரை லட்சம் ரூபா பெறுமதியான துணிகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.''

''மேலதிக இறங்குதுறை அளவையாளர் அறையிலிருந்த இரும்புப்பெட்டி உடைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் உள்ள இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்களும், தங்க நகைகளும் கொள்ளையடிக்கப்படவில்லை.

கலெக்டர் காரியாலயத்தில் உள்ள 7000 ரூபா பெறுமதியான தட்டச்சு உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக்கொள்ளையினால் சுங்க இலாகாவிற்கு ஐந்து லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் அதியர் விசா

## இருவர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பதும் ஒரு காரணம் எனத்தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை தொடக்கம் உண்ணாவிரதமிருந்து வரும் மாணவர்களின் பெற்றோர் கண்ணீரும் கம்பலையுமாக கொட்டகையில் இருக்கக் காணப்பட்டனர்.

ஏராளமான பொது மக்களும், மாணவர்களும் உண்ணாவிரதமிருக்கும் கொட்டகைக்கு முன்னால் நின்று கொண்டிருந்தனர்.

உண்ணாவிரதமிருக்கும் மாணவர்களுக்கு ஆதரவாக பெரியவிளான் பண்டத்தரிப்பு பங்கு மக்கள் 60 பேரளவில் பங்குத் தந்தை ஜெயக்குமார் தலைமையில் நேற்றுப் பகல் சிவன் கோவில் முன்றலில் உண்ணாவிரதமிருந்தனர். சமயவேறுபாடின்றி இந்து-கிறிஸ்தவ மக்கள் இதில் பங்கு கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் கிறிஸ்தவ தேவாலயத்தில் உண்ணாவிரதிகளுக்காக கிறிஸ்தவ மாணவ-மாணவிகள் பிரார்த்தனை செய்தனர்.

மேலும் ஆதரவு தெரிவித்து கொடிகாமம் காளி கோவில், சாவகச்சேரி, ஆவரங்கால், உரும்பராய் ஆகிய இடங்களில் நேற்று பொது மக்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

நேற்றுக் காலை இந்து ஆலயங்களிலும் மாணவர்களின் சாகும்வரை உண்ணாவிரதக் கோரிக்கைக்காக விசேஷ பூசைகள் நடைபெற்றன.

யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களைப் பார்த்தார்.

இன்றுடன் 6வது நாளாக சாகும்வரை உண்ணாவிரதம் தொடர்கிறது. (மா)

## கல்பகே...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னவே அவருக்கு எடுத்துக்கூறிவிட்டோம். அவர்தான் தீர்வு காணவேண்டும்.''

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. ரி. தயாபரன் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகளிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நண்பகல், சட்டத்தரணிகளான ஆர். விசுவநாதன், எம். சிறிகாந்தா, ஆர். தவராசா, ரி நாகராசா ஆகியோர், யாழ். பல்கலைக்கழகத்திற்குச் சென்று சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

ரணை செய்துவருகிறார். இக்கொள்ளைக்குப் பாவிக்கப்பட்ட வான் கொழும்புத்துறையில் அனாதரவாக நின்றபோது கண்டுபிடிக்கப்பட்டது. [மா-க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது; Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.